ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

25.09.2025

1. அறுபடை வீடுகள் கடந்துமே
அன்னதான சேவைக்கு தனிவீடு
ஆறுமுக அரங்கன் எனை படைத்து
அகிலத்தில் பிரணவக்குடிலெனும் ஏழாம் படைவீடு

2. படைவீடு கண்ட வேலவா போற்றி
பகருவேன் ஆறுமுக அரங்க ஞானியும்
தடையற விசுவாவசு நங்கை திங்கள்
தக்கநல் ஈராம் குருவார அருளாசி

3. ஆசிதனை தொண்டர் பெருமக்கட்கும்
அகிலம் ஞானவழி சிறந்திடவும்
ஆசியாக அருட்சுவடி வழி அருள்வேன்
அன்னதான சேவைக்கு தனிவழி காட்டியாக

4. ஆகவே உலகமெங்கும் அரங்கன்
அகத்தியர் சன்மார்க்க சபை
மிகைபட பெருகி வருதலுற
மேலான தரும சிந்தை தானும்

5. தானாக மக்களிடை பரவி
தரணியில் பசிபிணி விரட்டும்
ஞானமாக தானமும் பரவிட
ஞானிகளே மகிழ்ந்து வெளிப்பட்டு

6. வெளிப்பட்டு அரங்கன் என் வழி
வினவிட அகிலம் முழுக்க
தெளிவுதிடம் தயவே வடிவான
தேர்வு முறை நல்லத் தலைமையை

7. தலைமையை உருவாக்கும் வண்ணம்
தனிப் பெருஞ்சக்தி பரவி
ஊழல் கயமை ஏதுமில்லா
உயர்வான ஞானவான்கள் நடத்தும்

8. நடத்தும் ஞான ஆட்சிக்காலம்
ஞானிகள் துணைபட அமையும்
இடர்களை வென்று உயர
எவற்றிலும் முழுமை கண்டடைய

9. அடையவே பிரணவக் குடிலாம்
அரங்கன் என் சபை அணுகி
தடையற நடக்கும் தருமத்தில்
தாராளப் பொருளுதவி செய்து

10. செய்துமே அரங்கா முருகா என
செபதபம் செய்து கொண்டு
மெய்ஞானம் தரும் ஞானிகளின்
மேலான பூசைதனில் கலந்து

11. கலந்துமே வழிபாடு செய்ய
கந்தனுடன் அரங்கன் யானும்
கலந்துமே சோதியாக வெளிப்பட
காட்சிவழி கடைத்தேற்றம் அடைவீர்
ஆறுமுக அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி